# ஸ்ரீவித்யாபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,

சக்காரம்பாளையம், அகரம் (அஞ்சல்), எளச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு (தாலுக்கா), நாமக்கல் (மாவட்டம்)- 637 202

செல் : **99655-31727, 94432-31727**


**வகுப்பு : 12ம் வகுப்பு** **அரையாண்டுப் பொதுத் தேர்வு 2018**

**பாடம் : பொருளியல்** **மதிப்பெண்: 90**

| பிரிவு - I | | 20 X 1 = 20 |
|---|---|---|
| **வினா எண்** | **விடைகள்** | **மதிப்பெண்கள்** |
| 1. | அ) தன்னிறைவு பொருளாதாரம் | 1 |
| 2. | அ) உற்பத்தியின் திறமைக் குறைவு | 1 |
| 3. | இ) J.R.ஹிக்ஸ் மற்றும் R.G.D.அலன் | 1 |
| 4. | ஈ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி | 1 |
| 5. | ஈ) மேற்கூறிய அனைத்தும் | 1 |
| 6. | இ) விலைத் தேவை நெகிழ்ச்சி | 1 |
| 7. | ஆ) S > D | 1 |
| 8. | அ) எல்லா காரணிகளும் மாறும் | 1 |
| 9. | ஈ) மேற்காணும் அனைத்தும் | 1 |
| 10. | இ) மொத்த வருவாய் | 1 |
| 11. | இ) சராசரி செலவுக் கோட்டின் மிகக் குறைந்த புள்ளியில் | 1 |
| 12. | இ) எண்ணிக்கையில்லா விற்பனையாளர்கள் | 1 |
| 13. | ஈ) முற்றுரிமை | 1 |
| 14. | ஈ) அமைப்பு | 1 |
| 15. | இ) இ.ஹாலே | 1 |
| 16. | இ) முழுவேலை நிலை | 1 |
| 17. | ஈ) ΔC/ΔY | 1 |
| 18. | ஆ) நீர்மம் | 1 |
| 19. | அ) பண்டமாற்று முறை | 1 |
| 20. | அ) பண அளிப்பு கட்டுப்பாடு | 1 |

| பிரிவு - II | | 7 X 2 = 14 |
|---|---|---|
| 21. | **வாய்ப்புச் செலவு**<br>❖ 'வாய்ப்புச் செலவு' என்பது சில வாய்ப்புகளை இழப்பதால் ஏற்படும் செலவாகும்.<br>❖ வாய்ப்புச் செலவு என்பது அடுத்த, தகுந்த மதிப்புடைய மாற்றுப் பண்டங்களின் மதிப்பையே குறிப்பிடுவதாகும்.<br>❖ கணக்குச் செலவிற்கும் பொருளாதாரச் செலவிற்கும் உள்ள முக்கியமான வேறுபாடே வாய்ப்புச் செலவாகும். | 2 |
| 22. | **நுகர்வோர் உபரி**<br>"ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட, வாங்குவதே நல்லது என்று முடிவு செய்து, கொடுக்க நினைக்கும் விலைக்கும், நுகர்பவர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம் எனப்படும்" - என மார்ஷல் இலக்கணம் தந்துள்ளார்.<br>நுகர்வோர் எச்சம் = தகுவிலை - உண்மை விலை | 2 |
| 23. | **பயன்பாடு:**<br>❖ பொதுவாகப் பயன்பாடு பயன்படுத்துதலைக் குறிக்கும்.<br>❖ பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள், பணிகளின் சக்தியே பயன்பாடு எனப்படும்.<br>❖ பயன்பாடு என்பது உளவியல் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. | 2 |

SVB ECONOMICS

24. **தேவைக் கோடானது ஏன் கீழ்நோக்கி வருகிறது:**

- ❖ தேவைக்கோடு சரிவதற்கான காரணம் 'குறைந்துச் செல் இறுதிநிலைபயன்பாட்டு விதி' ஆகும்.
- ❖ இந்த விதியானது, பண்டங்கள் கூடுதலாக நுகர்வதனால், பயன்பாடானது குறைந்து செல்கிறது என்பதை விளக்குகிறது.
- ❖ எனவே நுகர்வோர் ஒரு பொருளை குறைந்த விலைக் கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது.
- ❖ இதனை பதிலீட்டு விளைவு என்றும் அழைக்கலாம்.

2

25. **நீண்டகாலம், குறுகிய காலம் வேறுபாடு:**

| நீண்ட காலம் | குறுகிய காலம் |
|---|---|
| அனைத்து காரணிகளும் மாறும் | ஏதேனும் ஒரு உற்பத்தி காரணிகள் மட்டும் மாறும். |
| அளிப்பு அதிக நெகிழ்ச்சி உடையது | அளிப்பு நெகிழ்ச்சி அற்றது |
| விலை தீர்மானிப்பதில் அளிப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. | விலை தீர்மானிப்பதில் தேவை முக்கிய பங்கு வகிக்கிறது. |

2

26. **மூலதனத்தின் வடிவங்கள்:**

- ❖ பருமப் பொருள் மூலதனம்
- ❖ பண மூலதனம்
- ❖ மனித மூலதனம்

2

27. **சராசரி மாறாச் செலவு**

- ❖ சராசரி மாறாச் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறாச் செலவாகும்.
- ❖ மொத்த மாறாச் செலவினை உற்பத்தி அலகுகளால் வகுக்கும்போது கிடைக்கும் ஈவாகும்.
- ❖ சராசரி மாறாச் செலவு = மொத்த மாறாச் செலவு / உற்பத்தி

2

28. **இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டின் எடுகோள்கள்:**

- ❖ நிறைவுப் போட்டி நிலவுகிறது.
- ❖ உற்பத்திக் காரணிகள் அனைத்தும் ஒரே தன்மையுடையன.
- ❖ ஒரு காரணிக்குப் பதிலாக மற்றொரு காரணியைப் பயன்படுத்தலாம்.
- ❖ இக்கோட்பாடு குறைந்து செல் விளைவு விதியை அடிப்படையாகக் கொண்டது. இது வாணிபத்திற்கும் பொருந்தும்.

2

29. **ஒட்டு மொத்த தேவை எந்த இரு காரணிகளைச் சார்ந்தது:**

- ❖ நுகர்ச்சி நாட்டம்
- ❖ முதலீட்டுத் தூண்டல்

2

30. **பண அளிப்பின் நான்கு கூறுகள்:**

- ❖ $M_1$ = பொது மக்களிடம் உள்ள செலாவணி
- ❖ $M_2 = M_1$ + அஞ்சலக சேமிப்பு வைப்புகள்
- ❖ $M_3 = M_2$ + வங்கியில் உள்ள பொதுமக்களின் காலவைப்புகள்
- ❖ $M_4 = M_3$ + அஞ்சலக மொத்த வைப்புகளும் + பல்வேறு நிதி அமைப்புகளின் சேமிப்பு வைப்புகள்

2

**பிரிவு - III** 7 X 3 = 21

31. **கலப்பு பொருளாதாரத்தின் நன்மை, தீமை.**

**கலப்பு பொருளாதாரத்தின் நன்மைகள்:**

- ❖ திறமையான வளப் பயன்பாடு
- ❖ நிர்வகிக்கப்பட்ட விலை
- ❖ சமூக நலன்

**கலப்பு பொருளாதாரத்தின் தீமைகள்:**

- ❖ ஒருங்கிணைப்பின்மை
- ❖ மெதுவான வேலையில் மந்தத்தன்மையும் காலதாமமும்
- ❖ பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

3

32. **தேவை நெகிழ்ச்சியின் வகைகள்**



- ❖ விலைத் தேவை நெகிழ்ச்சி

விலை மாற்றத்தினால், தேவையில் ஏற்படுவதான மாற்ற அளவே விலைத் தேவை நெகிழ்ச்சி ஆகும்.

விலைத்தேவை நெகிழ்ச்சி = தேவை மாற்றத்தின் விழுக்காடு / பண்டத்தின் விலை மாற்றம் விழுக்காடு

3

SVBECONOMICS

| | | |
|---|---|---|
| | ❖ வருமானத் தேவை நெகிழ்ச்சி<br>வருமானத்தில் ஏற்படும் மாற்றம் தேவையின் அளவில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதே வருமானத் தேவை நெகிழ்ச்சி எனப்படும்<br>Ey = பண்டத்தின் தேவையின் அளவு மாற்ற விழுக்காடு / நுகர்வோரின் வருமான மாற்ற விழுக்காடு<br>❖ குறுக்குத் தேவை நெகிழ்ச்சி அல்லது பின்னியத் தேவை நெகிழ்ச்சி<br>உறவுடையப் பண்டங்களாகிய, பதலீட்டுப் பண்டங்களின் விலையிலோ அல்லது உடனுறு பண்டங்களின் விலைகளிலோ ஏற்படும் விலை மாற்றம் பண்டத்தின் தேவையில் எவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்துகிறது.<br>ec = X எனும் பண்டத்தின் தேவையின் அளவு மாற்ற விழுக்காடு / Y எனும் பண்டத்தின் விலைமாற்ற விழுக்காடு | |
| 33. | **தொழில் முனைவோரின் பணிகள்**<br>❖ இலாபகரமான முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்தல்<br>❖ உற்பத்தி அலகின் அளவைத் தீர்மானித்தல்<br>❖ உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல்<br>❖ உற்பத்திக் காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பைக் கண்டறிதல்<br>❖ புத்தாக்கப்பணி<br>❖ வெகுமதிச் செலவைத் தீர்மானித்தல்<br>❖ இடர்ப்பாடுகளை ஏற்றல், நிச்சியமின்மையை எதிர்கொள்ளல். | 3 |
| 34. | **முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**<br>❖ சட்டம் இயற்றுதல்<br>❖ விலை, உற்பத்தியளவு கட்டுப்படுத்துதல்<br>❖ வரி விதித்தல்<br>❖ நாட்டுடைமையாக்குதல்<br>❖ நுகர்வோர் சங்கங்கள் | 3 |
| 35. | **சிலோர் முற்றுரிமையின் இயல்புகள்:**<br>❖ **ஒன்றையொன்று சார்ந்திருத்தல்:** பிற நிறுவனங்களைச் சார்ந்து முடிவெடுத்துல் என்பது சில்லோர் முற்றுரிமையின் மிக இன்றியமையாத தனிப் பண்பாகும்.<br>❖ **குழுச் செயல்பாடு:** இந்த அங்காடி முறையில் நிறுவனங்கள் அனைத்தும் தமக்குள் ஒற்றுமையுடன் கூட்டுறவாக செயல்பட வேண்டிய கட்டாயத்தை உணர்ந்திருக்கும்.<br>❖ **மாறாத விலை:** மாறாத விலை என்பது மற்றொரு சிறப்பியல்பாகும். விலையானது மாற்ற முடியாத தன்மை கொண்டதாகும். ஒரு நிறுவனம் தன்னுடைய விலையை குறைத்தால் எதிராளிகள் பாதிக்கப்படுவார்கள். | 3 |
| 36. | **நீண்டகால சராசரிச் செலவு வளைகோடு.**<br>நீண்ட காலத்தில் அனைத்துக் காரணிகளும் மாறாக்கூடியவை. எனவே தேவையின் மாற்றத்திற்கேற்ப, மூலதனக் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் அளவை அந்நிறுவனம் மாற்றிக்கொள்ளக்கூடும்.<br><br>நீண்ட காலத்தில் உற்பத்தி அளவில் ஒரு நிறுவனம் பல்வேறு பதிலிகளை கொண்டுள்ளது என்ற எடுகோளின் அடிப்படையில் நீண்ட கால சராசரி வளைகோடு அமைந்துள்ளது. ஒவ்வொரு உற்பத்தி அளவிற்கும் அல்லது நிறுவனத்தின் அளவிற்கும், அந்நிறுவனத்திற்கே உரித்தான குறுகிய கால சராசரி செலவு வளைகோட்டை (SAC) கொண்டுள்ளது.<br>$SAC_1$ என்பது சிறிய அளவிலான நிறுவனம்<br>$SAC_2$ என்பது நடுத்தர அளவிலான நிறுவனம்<br>$SAC_3$ என்பது பெரிய அளவிலான நிறுவனம் | 3 |

SVR ECONOMICS

| | | |
|---|---|---|
| 37. | **சும்பிட்டரின் இலாபக் கோட்பாட்டு**<br>❖ புத்தாக்கம் புனைவதற்கான வெகுமதியே இலாபம் என்று சும்பீட்டர் கருதுகின்றனர்.<br>❖ புத்தாக்கம் புனைதல் என்பது புதிய கண்டுபிடிப்பை விட சிறந்ததாகும்.<br>❖ புதிய கண்டுபிடிப்புகள் தொழில் நடவடிக்கைகளில் புகுத்தப்படும் பொழுது புத்தாக்கமாக மாறுகிறது.<br>❖ புத்தாக்க நடவடிக்கைகளால், பொருளாதார முன்னேற்றமும் சமுதாய மாற்றங்களும் ஏற்படுகின்றன.<br>❖ எனவே தான் புத்தாக்கத்திற்கு இலாபத்தை பெறுகிறார். | 3 |
| 38. | **கீன்ஸ் கூறும் நீர்மை விருப்பத்திற்கான காரணங்கள்:**<br>❖ **பரிமாற்ற நோக்கம்:**<br>பரிமாற்ற நோக்கம் என்பது அன்றாட செலவுகளை மேற்கொள்ள வைத்திருக்கும் ரொக்க பணமாகும்.<br>❖ **முன்னெச்சரிக்கை நோக்கம்:**<br>எதிர்பாரா செலவுகளை சமாளிக்க மக்கள் ரொக்கமாக பணத்தை வைத்திருக்க விரும்புவர் இதுவே முன்னெச்சரிக்கை பணமாகும்.<br>❖ **ஊக வாணிப நோக்கம்:**<br>சந்தையில் எதிர்காலத்தில், என்ன நடக்கும் என்பதை ஊகித்தறிந்து, இலாப நோக்கத்திற்காகச் செயல்படுவது ஊக வாணிப நோக்கமாகும். | 3 |
| 39. | **அ) அருமை பணக்கொள்கை**<br>❖ பணவீக்கம் நிலவும் பொழுது மைய வங்கியானது அருமைப் பணக்கொள்கையைப் பயன்படுத்தி வீக்கத்தை கட்டுப்படுத்த முயலும்.<br>❖ 'அருமைப் பணம்' என்பது வட்டி வீதம் அதிகமாக இருப்பதையும் பண அளிப்பு, குறைந்த போக்கையும் குறிக்கும்.<br>**ஆ) மலிவு பணக்கொள்கை**<br>❖ மலிவுப் பணம் என்பது குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதைக் குறிக்கும்.<br>❖ மலிவுப் பணக்கொள்கையை ஒரு நாடு, பொருளாதார மந்தகாலத்தில் பின்பற்றும். | 3 |
| 40. | **மாநில அரசின் முக்கிய வரி வருவாய்:**<br>❖ விற்பனை மற்றும் செய்தித்தாள் தவிர மற்ற பொருள்கள் மீதான வரிகள்.<br>❖ வேளாண்மை வருவாய் மற்றும் நிலம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள்.<br>❖ நிலம், மனைகள், கட்டிடங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்.<br>❖ மது வகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள்<br>❖ ஒரு மாநிலத்திலிருந்து பிரிதொரு மாநிலத்திற்கு பண்டங்களை கொண்டு வரும் பொழுது விதிக்கப்படும் வரிகள்.<br>❖ கனிமப் பொருள்களின் உரிமங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்<br>❖ மின்சார நுகர்வு, விற்பனை மீதான வரிகள்<br>❖ விலங்குகள், படகுகள், வாகனங்களின் மீது விதிக்கப்படும் வரிகள்.<br>❖ விளம்பரங்கள், செய்தித்தாள் தவிர்த்து பிற விளம்பரங்கள் மீதான வரிகள்.<br>❖ தொழில்கள், வர்த்தகம், வேலைகள், மீதான வரிகள். | 3 |
| | **பிரிவு - IV** | 7 X 5 = 35 |
| 41. | **(அ) பொருளாதாரத்தின் பல்வேறு வரையறைகளை விவாதிக்கவும்.**<br>**ஆதம் ஸ்மித்தின் இலக்கணத்தைத் தருக.**<br>(i) ஆதம் ஸ்மித் (1723-1970) பொருளியலின் இலக்கணத்தை வரையறுத்துள்ளார்.<br>(ii) பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்.<br>(iii) 1776 ஆம் ஆண்டில் '**நாடுகளில் செல்வம்''** என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.<br>**இலயனல் ராபின்ஸின் இலக்கணத்தை தருக.**<br>(i) இலயனல் ராபின்ஸ் அவர்கள் பொருளியலுக்கு கீழ்க்கண்டவாறு இலக்கணம் வரையறுத்துள்ளார்.<br>(ii) விருப்பங்களோடும், கிடைப்பருமையுள்ள, மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மினத நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியலே பொருளியலாகும்''. | 5 |

SVB ECONOMICS

| | | |
|---|---|---|
| | **நவீன பொருளாதார இலக்கணம் தருக.**<br>(i) சாமுவெல்சனின் இலக்கணம் நவீன பொருளாதார இலக்கணமாக கருதப்படுகிறது.<br>(ii) மாற்றுப் பயன்பாடுடைய பற்றாக்குயையான வளங்களைப் பயன்படுத்தி சமுதாயம் எவ்வாறு தேர்ந்தெடுக்கிறது என்பதை பற்றியும் பண்டங்களையும், பணிகளையும் தற்கால, எதிர்கால நுகர்வுக்காக உற்பத்தி செய்கின்றன என்பது பற்றியும் பயிலும் ஒரு சமூக அறிவியலே பொருளியலாகும். | |
| **அல்லது** | **முதலாளித்துவம் அதன் நன்மை, தீமைகள்:**<br>முதலாளித்துவ பொருளாதாரத்தின் **"தடையில்லா சந்தைகளின்",** மூலமே பண்டங்களின் உற்பத்தி மற்றும் பகிர்வு தீர்மானிக்கப்படுகிறது. இது அங்காடிப் பொருளாதாரம் (அல்லது) தடையில்லா வாணிப பொருளாதாரம் என்றும் அழைக்கப்படுகிறது.<br><br>**அங்காடிப் பொருளாதாரத்தின் நன்மைகள் :**<br>**அ) உற்பத்தி பெருகுகிறது :**<br>அங்காடிப் பொருளாதாரத்தில் ஒரு விவசாயியோ, வணிகரோ, தொழிலதிபரோ தனக்கென சொத்தினைப் பெற்று, தான் விரும்பும் வழியில் பயன்படுத்திக் கொள்ளலாம்.<br><br>**ஆ) நலத்தைப் பெருக்குதல் :**<br>திட்டமிடுதலின்றி, உற்பத்தி மற்றும் வளத்தைப் பயன்படத்துதலில் திறன் மேம்படுகிறது. ஒருவனது தன்னலம் சமுதாயத்தின் நலத்தையும் உயர்த்துகிறது.<br><br>**இ) நெகிழ்ச்சியுடைய அமைப்பு முறை :**<br>பொதுவாக பொருளாதாரத்தில் 'பற்றாக்குறையும்', உபரியும்', 'தேவை' மற்றும் 'அளிப்பின்' மூலம் சரி செய்யப்படுகிறது. இவ்வாறு **"விலையின் இயக்கத்தால்"** தானாகவே அது செயல்படுகிறது.<br><br>**ஈ) அரசின் தலையீடின்மை :**<br>(i) அரசு பொருளாதாரச் செயலபாடுகளில் குறைவான பங்கினையே பெற்றுள்ளது.<br>(ii) பொருளாதார நிறுவனங்கள், தானாகவே அரசின் தலையீடியின்றி தன்னிச்சையாகச் செயல்படுகின்றன.<br><br>**உ) குறைந்த விலை மற்றும் தரமான பொருட்கள் :**<br>நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு முழு சுதந்திரம் இருப்பதால் தரமான பொருட்களைக் குறைவான செலவில் மற்றும் விலையில் உற்பத்தி செய்ய முடிகிறது.<br><br>**அங்காடிப் பொருளாதாரத்தின் தீமைகள் :**<br>**அ) ஏற்றத்தாழ்வுகள் :**<br>**(i)** வருவாய் ஏற்றத்தாழ்வுகளும் சொத்துக்கள் ஒரு சிலரிடம் குவிதலையும் முதலாளித்துவத்தின் பெரிய குறைபாடாகும்.<br>(ii) முதலாளித்துவம் செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை மேல் அதிகரிக்கச் செய்கிறது.<br><br>**ஆ) முற்றுரிமை வளர்ச்சி :**<br>**(i)** ஏற்றத்தாழ்வுகள் முற்றுரிமை வளர்ச்சியுறச்செய்கின்றன.<br>(ii) நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்தல் மற்றும் முற்றுரிமை கூட்டு நிறுவனம் அமைப்பதன் மூலம், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது.<br><br>**இ) வீழ்ச்சி / மந்தம் :**<br>**(i)** அதிகப் போட்டியின் காரணமாகப் பொருட்கள் அளவுக்கதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.<br>(ii) செல்வந்தர்கள் ஏழைகளைச் சுரண்டுகிறார்கள். | 5 |

SVB ECONOMICS

**ஈ) இயந்திரமயமாதல் :**

i) அங்காடிப் பொருளதாரம் இயந்திரமயமாதலையும் தானியங்கி தன்மையும் ஊக்குவிக்கிறது.

(ii) ஆகையால் உழைப்பை அதிகமாகப் பெற்றுள்ள பொருளாதார நாடுகளில் **'வேலையின்மை'** ஏற்படுகிறது.

**உ) நலம் புறக்கணிக்கப்படுதல் :**

அங்காடிப் பொருளாதாரத்தில் தனியார் நிறுவனங்கள் சொகுசு / ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்து அதிக இலாபம் ஈட்டுவதுடன் குறைவாக இலாபம் தரும் அடிப்படைப் பண்டங்கள் உற்பத்தி செய்வதைப் புறக்கணிக்கிறது.

**ஊ) உழைப்பு சுரண்டப்படுதல் :**

தொழிலாளர்களைத் தேவையென்றால் வைத்துக் கொள்வதும் இல்லையெனில் நீக்கிவிடுதலும் சாதாரணமான செயல்பாடாகும். இங்கு தொழிலாளர்களின் ஊதியத்தை குறைத்து உழைப்பு சுரண்டப்படுகிறது

42. **குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி:**

**முன்னுரை :**

**(i)** குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி நுகர்வோரின் சாதாரண அனுபவத்தை விளக்குகிறது.

(ii) நுகர்வோர் மேலும் மேலும் ஒரு பண்டத்தை நுகர்வதால், அதிலிருந்து கிடைக்கும் கூடுதல் பயன்பாடு குறைந்து, கொண்டே செல்லும்.

(iii) ஆல்பிரட் மார்ஷல் தான் இக்கருத்தை ஒரு விதியாக மாற்றினார்.

**இலக்கணம் :**

"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" என்று மார்ஷல் இவ்விதியை விளக்குகிறார்.

**எடுகோள்கள் :**

**(i)** நுகரப்படும் பண்டத்தின் அளவு தரமான அலகுகளால் அளவிடப்பட்டிருக்கவேண்டும்.

(ii) பண்டங்கள் நுகரும் பொழுது கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகரவேண்டும்.


(iii) சுவைக்கும் பாங்கு, பழக்கவழக்கங்கள், வருமானம் மாறாது நிலையாக இருக்க வேண்டும்.

(iv) பயன்பாட்டை அளவிட முடியும்.

**அட்டவணை :**

**மொத்த, இறுதிநிலைப் பயன்பாட்டு பட்டியல்**

| அளவு | மொத்த பயன்பாடு TU | இறுதிநிலை பயன்பாடு MU |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 |
| 3 | 45 | 10 |
| 4 | 50 | 5 |
| 5 | 50 | 0 |
| 6 | 45 | -5 |
| 7 | 35 | -10 |




5

**வரைபட விளக்கம் :**

(i) X-அச்சில் ஆப்பிலும் Y-அச்சில் மொத்தப்பயன்பாடு மற்றும் இறுதிநிலைப் பயன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) TU – மொத்த பயன்பாடு, MU - இறுதிநிலைப்பயன்பாடு.

(iii) இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும்போது மொத்த பயன்பாடு உச்சத்தை அடைகிறது.

(iv) இறுதிநிலைப் பயன்பாடு எதிர்கணிகத்திற்கு செல்லும் பொழுது மொத்த பயன்பாடானது குறைந்து கொண்டே செல்கிறது.

SVB ECONOMICS

அல்லது

**சமநோக்கு வளைகோட்டின் இலக்கணம்**

**இலக்கணம் :**

"இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே" சமநோக்கு வளைக்கோடு எனப்படும்.


**சமநோக்கு வளைக்கோட்டின் பண்புகள் :**

1. எல்லா சமநோக்கு வளைக்கோடுகளும் வலப்புறமாக, கீழ்நோக்கிச் செல்லும்.
2. சமநோக்கு வளைகோடுகள் குவிந்த நிலையில் அமையும்.
3. இரண்டு சமநோக்கு வளைக்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.

**(1) எல்லா சமநோக்கு வளைகோடுகளும் வலப்புறமாக கீழ்நோக்கி செல்லும் :**

(i) கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் சமநோக்கு வளைகோடு, நுகர்வோர் X பண்டகத்திற்கு பதிலாக Y பண்டத்தினைப் பதிவீட்டு பண்டமாக தெரிவுச் செய்கின்றார்.

(ii) Y பண்டத்தை அதிகரித்து X பண்டத்தை குறைக்கிறார் எனவும் பொருள்படும்.





5

**(2) அனைத்து சமநோக்கு வளைகோடுகளும் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும் :**

(i) இறுதிநிலை பதிவீட்டு வீதம் (DMRS) அதிகரிக்கும்போது சமநோக்கு வளைகோடுகள் தோற்றுவாய் நோக்கி குழியாக காணப்படும்.

(ii) இறுதிநிலை பதிவீட்டு வீதம் (DMRS) குறைந்து கொண்டே செல்கிறது.




**(3) எந்த இரு சமநோக்கு வளைகோடுகளும் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளாது :**

**(i)** மூன்றாவது எடுகோள் இரண்டு சமநோக்கு வளைகோடுகள் எப்போதும் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது என்பதாகும்.

(ii) இரண்டாவது சமநோக்கு வளைகோட்டில் ($I_1C_2$) உள்ள புள்ளி A முதலாவது வளைகோட்டில், ($IC_1$) உள்ள புள்ளி B-யை விட அதிக மனநிறைவை நுகர்வோருக்குத் தருகிறது.

(iii) சமநோக்கு வளைகோடுகள் எப்போதும் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளாது.

43.

**குறுக்குத் தேவை நெகிழ்ச்சி:**

உறவுடையப் பண்டங்களாகிய, பதிவீட்டுப் பண்டங்களின் விலையிலோ அல்லது உடனுறு பண்டங்களின் விலைகளிலோ ஏற்படும் விலை மாற்றம் பண்டத்தின் தேவையில் எவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதே குறுக்கு அல்லது பின்னியத் தேவை நெகிழ்ச்சி எனப்படும்.

$$e_c = \frac{\text{x எனும் பண்டத்தின் தேவையின் அளவு மாற்ற விழுக்காடு}}{\text{Y எனும் பண்டத்தின் விலை மாற்ற விழுக்காடு}}$$



$$e_c = \frac{\Delta q_x}{q_x} \div \frac{P_y}{\Delta P_y}$$

$$e_c = \frac{\Delta q_x}{q_x} \div \frac{P_y}{\Delta P_y}$$

$$e_c = \frac{\Delta q_x}{q_x} \div \frac{P_y}{\Delta P_y}$$

xமற்றும் y பண்டங்களுக்கிடையேயான உறவு பதிலீட்டுப் பண்டங்களான தேனீர் மற்றும் காப்பி போன்றதாகவோ உடனுறு பண்டங்களாகிய போனா மற்றும் மை போன்றோ இருக்கக்கூடும்.

5

| | | |
|---|---|---|
| அல்லது | **தேவை விதி:**<br>தேவை<br>(i) தேவை என்பது அப்போருளை வாங்குவதற்கான வீரப்பத்தையும் போதிய வாங்கும் சக்தியையும், வாங்கிவிட வேண்டும் என்கின்ற முடிவையும் குறிக்கும்.<br>(ii) வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கும் ஒரு எளிய நபர் ‘கார்’ ஒன்றை வாங்க வேண்டும் என்பது வெறும் விருப்பமே ஆனால் பணக்காரர் ஒருவர் தனக்கு கார் வாங்க வேண்டும் என்று விரும்பும்போது அது தேவை என கருதப்படுகிறது.<br>(iii) விருப்பத்தோடு கூடிய வாங்கும் சக்தியே ‘தேவை’ என்று அழைக்கப்படுகிறது.<br><br>**தேவையை தீர்மானிக்கும் காரணிகளை வகைப்படுத்துக.**<br>(i) தேவையை தீர்மானிக்கும் முக்கிய காரணி விலை எனப்படும்.<br>(ii) பிற காரணிகளான வருமானம், சுவை, தேர்ந்தெடுத்தல், நுகர்வோரின் செல்வம் மற்றும் பிற பொருள்களின் விலை போன்றவையாகும்.<br>(iii) Dx = F(Px, Ps, Y, T, W)<br>நுகர்வோரின் சுவைகளும் மற்றும் தேர்வுச் செய்தலும்<br>நுகர்வோரின் வருமானம்<br>பதிலீட்டு பண்டத்தின் விலை<br>நுகர்வோரின் எண்ணிக்கை<br>வருங்கால விலைப்பற்று எதிர்பார்ப்பு<br>வருமான பகிர்வு<br>பருவக்கால மாற்றங்கள்<br>வணிக நிலை<br>நுகர்வோரின் புத்தாக்கம் புனைதல் | 5 |
| 44. | **குறுகியகால சமநிலை விலை:**<br><br><br>(அ) குறுகியகாலம் என்பது ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளப்படி, ஒரு உற்பத்தி காரணியின் உள்ளீடு மட்டும் மாறாமல் இருக்கும்.<br>(ஆ) மாறக்கூடிய உள்ளீடுகளின் மாற்றத்திற்கு ஏற்ப அளிப்பானது சரி செய்து கொள்கிறது.<br>(இ) அளிப்பு மாற்றத்தினால் சமநிலை விலை தீர்மானிக்கப்படுகிறது.<br>வரைபட விளக்கம்:<br>(அ) SsP என்ற கோடானது முற்றிலும் நெகிழ்வுள்ள குறுகிய கால அளிப்புக் கோடு ஆகும்<br>(ஆ) மாறும் காரணிகளின் உள்ளீட்டின் மாற்றத்தினால், அளிப்பானது ஞ யில் இருந்து க்கு அதிகரிக்கிறது.<br>(இ) விலை யிலிருந்து அளவுக்கும் தேவை யிலிருந்து க்கும் அதிகரித்து செல்கிறது.<br>(ஈ) குறுகிய காலத்தில் தேவையும் அளிப்பும் விலையின் மீது தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்தி சமநிலை விலையை தீர்மானிக்கிறது.<br>**நீண்ட கால சமநிலை விலை :**<br>(அ) நீண்ட காலத்தில், அனைத்துக் காரணிகளும் மாறக் கூடியவை.<br>(ஆ) மாறும் மற்றும் மாறா உள்ளீடு மாற்றத்திற்கு ஏற்ப அளிப்பின் அளவும் மாறும்.<br>(இ) அளிப்பின் மாற்றமானது, தேவையான எந்த ஒரு மாற்றத்தையும் சந்திக்கும்.<br>(ஈ) நீண்டகாலத்தில் தொழிற்சாலை இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும்.வரைபட விளக்கம் :<br>1) $S_{MP}$ - அங்காடிக் கால செங்குத்து அளிப்புக்கோடு ஆகும்.<br>2) $S_{SP}$ - குறுகியகால அளிப்புக்கோடு தட்டையாக சரிகிறது.<br>3) $S_{LP}$ - நீண்டகால அளிப்பு கோடுமுற்றிலும் நெகிழ்ச்சி தன்மை உடையது.<br><br> | 5 |

SJB ECONOMICS

அல்லது

**மாறும் விகித விளைவு விதியை கூறி விளக்குக.**

குறுகிய கால உற்பத்திச் சார்பு


**முன்னுரை :**
ஓர் உற்பத்தி காரணி நிலையாக நிலையாக இருக்கும் போது, ஏனைய உற்பத்திக் காரணிகளின் அளவை மாற்றினால் மாறும் விகித விளைவு விதி ஏற்படுகிறது.

**இலக்கணம் :**
ஓர் உற்பத்தி காரணி மாறாமலிக்கும் போது மற்றைய உற்பத்திக் காரணிகளின் அளவு மாறினால் ஆரம்பத்தில் இறுதிநிலை விளைவு அதிகரிக்கும். பின்பு மாறாமலிருக்கும், இறுதியில் உற்பத்தி குறைந்து செல்லும்.

**எடுகோள்கள் :**
1. ஒரே ஒரு உற்பத்திக் காரணிமட்டும் மாறும்போது ஏனைய உற்பத்தி காரணிகள் மாறாமல் இருக்கும்.
2. ஒருவேளை எல்லா உற்பத்திக் காரணிகளும் ஒரே விகிதத்தில் மாறுபட்டால் இவ்விதி பொருந்தாது.
3. உள்ளீடுகளின் விலைகள் மாறாமல் இருக்கும்.
4. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தொழில் நுட்பநிலை மாறாது. (அ) ஒரே நிலையாக இருக்கும்.

வரைப்படம் 6.1

மாறும் விகித விளைவு விதி




1. **முதல்நிலை : வளர்ந்து செல் விளைவு விதி :**
முதல் நிலை முடிவடையும் போது, சராசரி உற்பத்தி உச்சநிலையை அடைகின்றது. இதில் மொத்த உற்பத்தி சராசரி உற்பத்தி மற்றும் இறுதிநிலை உற்பத்தி அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

2. **இரண்டாம் நிலை : குறைந்த செல் விளைவு விதி :**
**(i)** இதன் முடிவில் இறுதி நிலை உற்பத்தித் திறன் பூஜ்யமாகும்.
**ii)** மொத்த உற்பத்தி குறைந்து செல்லும் விகிதத்தில் உயருகின்றது.
**(iii)** இறுதி நிலை உற்பத்தி பூஜ்யத்தையும் மொத்த உற்பத்தி உச்சநிலையையும் அடைந்தவுடன் இரண்டாவது கட்டம் முற்றுப் பெறுகிறது.

**3. மூன்றாம் நிலை : எதிர்கணிய உற்பத்தி :**
எதிர்கணிய உற்பத்தி இதில் இறுதிநிலை உற்பத்தி எதிர்மறையாகும் போது மொத்த உற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி இரண்டும் சரியத் தொடங்குகின்றன

5

SVB ECONOMICS

45. **நிறைவுப் போட்டி மற்றும் முற்றுரிமை வேறுபாடு.**

| வ.எண். | நிறைவுப் போட்டி | முற்றுரிமை |
|---|---|---|
| 1. | சுராசரி வருவாய் வளைக்கோடு (AR) X-அச்சுக்கு இணையான படுக்கைக்கோடாக அமைந்துள்ளது. இங்கு இறுதிநிலைவருவாயும் (MR) சராசரி வருவாயும் விலைக்கு சமமாக இருக்கும்.MR=AR=P | சுராசரி வருவாய்வளைக்கோடும் இறுதிநிலை வருவாய் வளைக்கோடும் கீழ்நோக்கி சரிந்து செல்கின்றன. இறுதி நிலை வருவாய், சராசரி வருவாய் மற்றும் விலையை விட கீழ்மட்டத்தில் உள்ளது. |
| 2. | சுமநிலையின் போது இறுதிநிலை செலவு, இறுதிநிலை வரவாய்க்கு சமமாகவும், மேலும் அது சராசரி வருவாயாகிய விலைக்கு சமமாகவும் அமைந்துள்ளது. ஆகவே விலை, இறுதிநிலை உற்பத்தி செலவுக்கு சமமாக உள்ளது. | சுமநிலையில் இறுதிநிலை செலவு இறுதிநிலை வருவாய்க்கு சமமாக உள்ளது. ஆனால் இறுதி நிலை வருவாய், சராசரி வருவாயாகிய விலையைவிட குறைவாக உள்ளது. அதாவது MC=MR<AR விலையானது இறுதிநிலை செலவைவிட அதிகமாக உள்ளது. |
| 3 | நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம், நீண்டகாலத்தில் சமநிலையை அடைய நீண்டகால சராசரி செலவு வளைக்கோட்டின் அடிமட்டத்தில் அமையும். | முற்றுரிமையில், ஒரு நிறுவனம் நீண்ட கால சமநிலையில் கூட உயர்வான சராசரி செலவினை மேற்கொள்ளும். |
| 4 | ஊற்பத்தியளவு அதிகமாகவும் விலை குறைவாகவும் இருக்கும். | உற்பத்தி குறைவாகவும் விலை அதிகமாகவும் இருக்கும். |
| 5 | நிறைவுப் போட்டியில் நிறுவனம் இயல்பு இலாபத்தை நீண்ட காலத்தில் அடையும் உச்ச இலாபத்தை குறுகிய காலத்தில் அடையும். | உச்ச இலாபமானது குறுகிய காலத்திலும் மற்றும் நீண்ட காலத்திலும் அடையும். |

5

அல்லது

**குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டியில் விலை, பண்டத்தின் அளவு நிர்ணயம்.**

**வருவாய் வளைகோட்டின் தன்மை:**

அ) நிறைவுப் போட்டியில் அங்காடி விலையானது தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் அங்காடி சக்திகளால் தீர்மானிக்கப்படுகிறது.


ஆ) சராசரி வருவாய் வளைக்கோடு நிலையாக இருப்பதால் இறுதிநிலை வருவாய் வளைக்கோடும் நிலையானதாகவும் சராசரி வருவாய் வளைவுக்கோட்டோடு இணைந்து செல்கிறது

**நிறைவுப் போட்டியில் குறுகிய காலத்தில் விலை, பண்டத்தின் உற்பத்தி நிர்ணயம்.**

(அ) ஒரு நிறுவனம் விலை ஏற்பவராக உள்ளதால் தனது உற்பத்தி வெளியீட்டை அதற்கு ஏற்றார் போல சரி செய்து உச்ச இலாபத்தை அடைகிறார்.

(ஆ) குறுகிய காலத்தில் புதிய நிறுவனங்கள் உள்ளே நுழைவதோ அல்லது பழைய நிறுவனங்கள் வெளியேறுவதோ சாத்தியமில்லை குறுகிய காலத்தில் நிறைவுப்போட்டியில் நிறுவனமானது உச்ச இலாபத்தையோ ஏற்க நேரிடும்.

**வரைபட விளக்கம்:**





(அ) OP என்பது அங்காடியில் நிலவும் விலையாகும். PL என்பது சராசரி வருவாய்

(ஆ) OM உற்பத்தியில், ME என்பது சராசரி வருவாய் MF என்பது சராசரி செலவாகும் இலாபம் என்பது வருவாய்க்கும் செலவுக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

(அ) ஒரு பொருளுக்கான இலாபம் என்பது FE ஆக கணக்கிடப்படுகிறது. HFEP என்பது நிறுவனம் ஈட்டும் உச்ச இலாபமாகும்.

5

SVB ECONOMICS

| | | |
|---|---|---|
| 46. | **ரிகார்டோவின் வாரக் கோட்பாடு :**<br>**(i)** 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மைப் பொருளியல் அறிஞரான ரிகார்டோவின் பெயரால் இக்கோட்பாடு அழைக்கப்படுகிறது.<br>**(ii)** 'வாரம் என்பது நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலிலிருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்குக் கொடுப்பதே ஆகும்'' என்று ரிகார்டோ வாரத்தை வரையறுத்துள்ளார்.<br>(iii) நிலத்தின் உண்மைச் சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு கொடுக்கப்பவது வாரமாகும்.<br>**(iv)** நிலம் அமைந்துள்ள இடத்தின் சிறப்புத் தன்மையைப் பொறுத்தும் வாரம் எழும் (உ.ம்.) சந்தைக்கு அருகாமையில் சில நிலங்கள்.<br>(v) மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது. முதலில் செழுமையான நல்ல நிலத்திலேயே பயிர் செய்வர் அதிக மக்கள் அவ்விடத்தில் குடியேறும் பொழுது நிலத்தின் தேவை அதிகரிக்கும்.<br><br><br>**(ஆ) விளக்கம் :**<br>(i) X – அச்சில் நிலத்தின் தரமும்<br>(ii)Y-அச்சில் நிலத்தின் உற்பத்தியும் காட்டப்பட்டுள்ளது.<br>(iii) நிழலிட்ட பகுதி வாரத்தைக் குறிக்கும்.<br>(iv) முதல் தர நிலமும் இரண்டாம் தர நிலமும் வாரத்தைப் பெறுகின்றன. மூன்றாம் தர நிலம் வாரம் பெறவில்லை.<br>(v) ஆகவே இது **வாரமில்லா நிலம்** என்றும் **இறுதிநிலை நிலம்** என்றும் அழைக்கப்படுகிறது.<br>**(இ) திறனாய்வு :**<br>(i) முதல் தரமான நிலத்தையே முதலில் பயிர் செய்யப்படுவதாக ரிகார்டோ கருதினார் ஆனால் இதற்கு எந்தவிதமான சான்றும் இல்லை.<br>(ii) நிலம் உண்மையானதும் அழிக்க முடியாததும் சக்தியைக் கொண்டுள்ளதாக ரிகார்டோ கருதுகிறார். ஆனால் அந்நிலத்தில் தொடர்ந்து பயிர்செய்வதால் நிலத்தின் செழுமை குறையும்.<br>(iii) நிறைவுப் போட்டியின் அடிப்படையில் ரிகார்டோவின் வாரக் கோட்பாடு அமைந்துள்ளது. நிலவும் நடைமுறையில் எங்கும் நிறைகுறைப் போட்டியே நிலவுகிறது. | 5 |
| அல் லது | **சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளை ஆராய்க.**<br>**(அ) சேயின் அங்காடி விதி :**<br>(i) பிரெஞ்ச் நாட்டின் பொருளியலறிஞரான ஜே.பி.சே. ''அரசியல் பொருளாதார ஆய்வுக்கட்டுரை'' நூலை 1803 ஆம் ஆண்டு வெளியிட்டார்.<br>(ii) 'அளிப்பு அதற்கான தேவையை தானே ஏற்படுத்துகிறது'.<br>**(ஆ) முழு வேலைவாய்ப்பு :**<br>பொருளாதாரத்தில் **''முழு வேலை வாய்ப்பு நிலை''** இருக்கும்.<br>**(இ) பொருளியலறிஞர் 'சே' விதியின் குறைபாடு :**<br>'சே' விதியின் குறைபாடுகளை ஜே.எம்..கீன்சு வெளிக்கொணர்ந்தார் 1936ஆம் ஆண்டு 'சே' விதியைக் குறை கூறி கீன்சு புரட்சிகரமான பொருளாதார கோட்பாட்டினை வெளியிட்டார்.<br>**(ஈ) 'சே' விதியின் முக்கியக் குறைபாடுகளாவன :**<br>**(i)** உலகப் பெருமநதத்தினால் 'சே' விதியின் புகழ் மங்கிப்போனது.<br>(ii) வருமானம் அனைத்தும் எப்போதும் நுகர்விற்கே செலவிடப்படுவதில்லை.<br>(iii) சேமிப்பு அனைத்தும் முதலீடு செய்யப்படுவதில்லை.<br>(iv) இவ்விதி அங்காடி பற்றிய தவறான ஆய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.<br>(v) `ஒட்டு மொத்தம் என்ற தவறான கருத்தால் இது பாதிக்கப்படுகிறது.<br>(vi) ஒட்டு மொத்த அளிப்பும், ஒட்டு மொத்த தேவையும் எப்போதும் சமமாக இருப்பதில்லை.<br>(vii) வட்டி வீதம் சமப்படுத்தும் காரணியல்ல.<br>(viii) முதலாளித்துவ முறை எப்போதும் தன்னைத்தானே சரி செய்து கொள்ளாது.<br>(ix) நிறைவு போட்டி என்பது உண்மையற்ற ஒரு எடுகோள் ஆகும். | 5 |

**உ) முடிவுரை :**

தற்போது ‘சே’ யின் வசதி செல்லத்தக்கதோ அல்லது பயனுள்ளளோ அல்ல எனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒட்டு மொத்த தேவை மற்றும் ஒட்டு மொத்த அளிப்பு சமன்பாட்டின்காரணமாக முழு வேலை வாய்ப்பு நிலவுவதால் சேயின் விதியைத் தொன்மை பொருளாதாரக் கோட்பாடு என ஏற்றுக்கொள்கிறது.

**47.** **பணக்கொள்கையின் நோக்கம் மற்றும் கருவிகளை விவாதிக்கவும்.**

**பணக் கொள்கையின் நோக்கங்கள் :**

(i) முழு வேலைவாய்ப்பு ii) நிலையான விலை

(iii) விரைவான பொருளாதார வளர்ச்சி (iv) பொருளாதார நிதி

**அ) பணக்கொள்கையின் கருவிகளை விவாதிக்கவும்.**

**பணக்கொள்கையின் கருவிகள் :**

பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை இருவகையாக பிரிக்கலாம்.

1) கடன் நிதி அளவு கட்டுப்பாட்டு முறைகள்

2) தேர்ந்தெடுத்த கடன் கட்டுபாட்டு முறைகள்

**1) கடன் நிதி அளவு கட்டுப்பாட்டு முறைகள் :**

(i) வட்டி வீதம்

(ii) ரொக்க இருப்பு வீதம்

(iii) வெளிச்சந்தை நடவடிக்கைகள் முதலியன அடங்குமட்.

**அ) வட்டி வீதம்**

**(i)** பொருளாதாரத்தில் அதிகப்படியான பணப்புழக்கம் ஏற்படுமாயின் மைய வங்கி பண புழக்கத்திலிருந்து பணத்தின் அளவைக் குறைக்க வேண்டும் வங்கி வட்டி வீதத்தை அதிகரிப்பதின் மூலம் இதைச் செய்யலாம்.

(ii) மைய வங்கி வட்டி வீதத்தை அதிகரிக்கும் பொழுது வணிக வங்கிகள் வசூலிக்கும் வட்டி வீதமும் அதிகரிக்கும்.

**ஆ) ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுதல் :**

**(i)** வணிக வங்கிகள் உருவாக்கும் கடன் அளவு அதனுடைய ரொக்க இருப்பு வீதத்தை பொறுத்து அமையும் ரொக்க இருப்பு வீதத்தை மாற்றும் அதிகாரம் மைய வங்கிக்கு மட்டுமே உண்டு.

(ii) பணவீக்க காலத்தில் பொருட்களின் விலை உயர்வை தடுக்கவும் கடன் அளவை கட்டுப்படுத்தவும் இக்கருவியே பயன்படுகிறது.

**இ) வெளிச்சந்தை நடவடிக்கைகள் :**

(i) மைய மாநில அரசுகளின் கடன்பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் வெளிச்சந்தை நடவடிக்கை நடைபெறுகிறது.

(ii) போதுமான அளவு அரசு கடன்பத்திரங்களை மைய வங்கி வைத்திருத்தல்.

**ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு முறைகள் :**

(i) திட்டமிட்ட பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு முறைகள் (கருவிகள்) முக்கிய பங்கு வகிக்கின்றன.

(ii) இது தேவையற்ற இனங்கள் கடன் அளளவைக் குறைத்து பயனுள்ள இனங்களில் கடன் அளவு செல்லுமாறு வழி நடத்துகிறது.

**(2) தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு கருவிகளில் கீழ்க்கண்டவைகள் அடங்கும்**

(i) கடன் பத்திரங்களை வாங்க அளிக்கப்படும் கடன் அளவில் குறைந்த பட்ச உச்ச வரம்பை நிர்ணயித்தல் (உம்) பற்றாக்குறையாக உள்ள பங்குகள்.

(ii) கடன் விரிவாக்க எல்லையை தீர்மானித்தல்

(iii) சில துறைகளை ஊக்கப்படுத்தவும் சில துறைகளின் ஆர்வத்தை குறைக்கவும், பல விதமான வட்டி வீதங்கள் விதிக்கப்படுகிறது.

5

**அல்லது** **பொது நிதியியலின் உட்பிரிவுகளை விளக்கவும்.**

**பொது நிதியின் உள்ளடக்கங்கள் பின்வருமாறு :**

1. பொதுச் செலவு
2. பொது வருவாய்
3. பொதுக்கடன்
4. நிதிநிருவாகம்
5. கூட்டாட்சிமுறை (மத்திய – மாநில நிதி உறவுகள்)

5

**(1) பொதுச் செலவு :**

**(i)** நவீன அரசு ஒரு நல அரசு, எனவே அதிகப்பட்ச நலத்தை நிலைநாட்டுவது அதனுடைய பொறுப்பாக உள்ளது.

(ii) அரசு பலவகை பணிகளை மேற்கொள்ளும்.

SVB ECONOMICS

(iii) அரசின் நிதி ஆதாரங்களை பல்வேறு வளர்ச்சி பணிகளுக்காகச் செலவு செய்வதேயாகும்.

**(2) பொது வருவாய் :**

(i) அரசு பெறுகின்ற வருவாய், அரசின் வருவாய் எனப்படும்.

(ii) பொது வருவாயானது வரி வருவாய், வரி இல்லாத வருவாயை உள்ளடக்கியதாகும்.

(1) வரி வருவாய் : வரிகள், வரித்தாக்கம் (ம) வரி நிகழ்வுகள்

(2) வரியல்லாத வருவாய் : வணிக வருவாய் (இலாபம்) நிர்வாக வருவாய், வெகுமதி மற்றும் மானியங்கள்.

**(3) பொதுக்கடன் :**

**(i)** அரசின் கடன்களை எப்படி அதிகரிப்பது என்பது பற்றியும், அதிகரிக்கின்ற கடன்களை எப்படித் திரும்பச் செலுத்துவது என்பது பற்றியும் கூறுகிறது.

(ii) பொதுமக்களிடமிருந்து அரசு பெறும் கடன் பொதுக்கடன் என்றும் கூறுவர்.

(iii) உள்நாட்டு கடன் : (எ.கா) வணிக வங்கி, மைய வங்கி, பொது மக்கள்.

(iv) வெளிநாட்டு கடன் : (எ.கா.) உலக வங்கி (World Bank), பன்னாட்டு நிதி நிறுவனம் பெறுகின்ற கடனாகும்.

**(4) நிதி நிர்வாகம் :**

(i) அரசின் நிறுவனங்கள், அரசின் பணிகள் மற்றும் அரசின் இயந்திரங்களோடு சார்ந்த நிதி நடவடிக்கைகளே நிதி நிர்வாகமாகும்.

(ii) நிதி நிர்வாகம் என்பது வரவு-செலவு திட்டங்களை வடிவமைத்தல், உருவாக்குதல், ஒப்பளித்தல் மற்றும் பாராளுமன்றம், போன்றவை பற்றியதாகும்.

**(5) கூட்டாட்சி நிதி :**

(i) பொது நிதியின் ஒரு உட்பிரிவே கூட்டாட்சி நிதியாகும்.

(ii) கூட்டாட்சி என்பது இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட அரசுகளின் கூட்டமைப்பு, இக்கூட்டாட்சி அமைப்பில் மைய, மாநில மற்றும் உள்ளூர் அரசுகள் ஒருங்கிணைந்துள்ளன.

SVB ECONOMICS


# DEPARTMENT OF ECONOMICS

## SHRI VIDHYABHARATHI MATRIC HR. SEC. SCHOOL

**SAKKARAMPALAYAM, AGARAM (POST), ELACHIPALAYAM**

**TIRUCHENGODE (TK), NAMAKKAL(DT) – 637 202**

**CELL: 99655-31727, 63838-05818**